பற்றி விவாதிப்பதற்காகப் பல கூட்டங்களை நடத்தினர். ஆனால், எந்த முடிவும் இந்த இரட்டைத் திட்டம் சம்பந்தமாக இதுவரை எடுக்கவில்லை. ஆனால், அரசைப் பொறுத்த வரைக்கும் எவ்வளவு 'ஆப்ஸ்டக்கில்ஸ்' இருந்தாலும்கூட, இந்த முயற்சிகளை தொடர்ந்து ,எடுக்கும்.

திரு. ச. பாலகிருஷ்ணன் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்தியத் துணைக் கண்டத்திலே வேறு எந்த மாநிலமாவது இந்த முயற்சியிலே ஈடுபட்டிருக்கிறதா ? இத்திட்டத்திற்கு மத்திய அரசிடம் நிதி உதவியும் ஒத்துழைப்பும் கேட்கப்பட்டுள்ளதா ? கேட்கப்பட்டிருந்தால் மத்திய அரசு எந்த வகையிலே உதவ முன் வந்திருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவர் அவர்களே, இந்தத் தகவல் என்னிடத்தில் இல்லை. தனிக் கேள்வி கேட்டால் விவரமான பதில் தருகிறேன்.

திரு. பி. எம். தங்கவேல்ராஜ் : தலைவரவர்களே, கடல் நீரை குடிநீராக்குவோம்; கடல் பாசியில் அல்வா செய்வோம் என்று பேரறிஞர் அண்ணா அவர்கள் தேர்தல் வாக்குறுதியாகக் கொடுத்திருந்தார்கள். பேரறிஞர் அண்ணா வழியில் நடக்கும் இந்த அரசு கடல் பாசியிலிருந்து அல்வா செய்யும் திட்டத்தைப் பரிசீலிப்பார்களா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவரவர்களே, பேரறிஞர் அண்ணா அவர்கள் 31-12-1981-க்குள் கடல் பாசியிலிருந்து அல்வா செய்வோம் என்று சொல்லவில்லை. அது ஒரு 'ஆம்பிஷன்'. அது ஒரு ஆசையால், அவரால், சொல்லப் பட்டது. அதை ஒரு கொள்கையாக வைத்து........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கடல் பாசியில் அல்வா தயாரிக்கும்போது பார்க்கலாம். இது மூலக்கேள்விக்கு சம்பந்தப் பட்டது அல்ல.

TRUTH ALONE TRIUMPHS

கிராமக் குடிநீர் வழங்கு திட்டங்கள்.

* வினா எண் 272—திரு. பி. ஈஸ்வர மூர்த்தி என்கிற சொரணம் : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) கிராம குடிநீர் சப்ளை விரைவுத் திட்டங்களுக்காக 1981–1982 ஆம் ஆண்டில் தமிழக அரசு எவ்வளவு செலவிடத் திட்டமிடப்பட்டுள்ளது?

(ஆ) மத்திய அரசின் உதவி இதற்கு கிடைக்குமா? எவ்வளவு?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : (அ) ரூபாய் 30 கோடி.

1982 பிப்ரவரி 19]

(ஆ) இதில் ரூ. 5 கோடி மத்திய அரசிடமிருந்து கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

சாத்தனூர் அணையிலிருந்து புதிய வாய்க்கால் வெட்டும் திட்டம்.

*வினா எண் 273—திரு. சோ. கலிதீர்த்தான் : மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சாத்தனூர் அணையிலிருந்து வலதுபுறம் வாய்க்காலுக்கு மேல்புறம் புதிதாக வாய்க்கால் பாசனத்திற்கு பயன்பட அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது செயல்படத் துவங்கும்?

மாண்புமிகு திரு. கே. இராஜாமுகமது : (அ) & (ஆ) இத்திட்டம்பற்றி தலைமைப் பொறியாளரின் செயற்குறிப்பு ஆய்வு செய்யப்பட்டது. புதிதாக திட்டமிடப்படும் வாய்க்கால் வெட்டும் பணியை, பொன்னையாற்றை நவீனப்படுத்தும் திட்டத்துடன் இணைத்து செயல்படுத்தினால், இத்திட்டத்தின்மூலம் கிடைக்கக்கூடிய நீரியல் பயன் அதிகரிக்குமென்று கருதப்படுவதால் பொன்னையாற்றை நவீனப்படுத்தும் திட்டத்தோடு புதிய கால்வாய் வெட்டும் திட்டத்தை இணைத்து அனுப்பும்படி தலைமைப் பொறியாளர் (ஆய்வு) கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளார். அவரது அறிக்கை எதிர்பார்க்கப்படுகிறது.

திரு. சோ. கலிதீர்த்தான் : தலைவரவர்களே, இந்தத் திட்டம் ஏற்கெனவே மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் அவர்கள் பொதுப்பணித் துறை அமைச்சராக இருந்தபோது ஆய்வு செய்யப்பட்டது. அது என்ன காரணத்தால் தாமதம் ஆகிறது என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜாமுகமது : தலைவரவர்களே, நான் என் பதிலிலேயே சொல்லியிருக்கிறேன். பொன்னை ஆற்றை நவீனப்படுத்தும் திட்டத்துடன் இணைத்து செயல் படுத்தினால் இத்திட்டத்தின்மூலம் கிடைக்கக்கூடிய நீரியல் பயன் அதிகரிக்குமென்று எதிர்பார்க்கிறோம். மேலும் ஒரு குறிப்பிட்ட பகுதியில் உள்ள உபரி நீரை கணக்கில் கொண்டு திட்டத்தை மேற்கொள்வதாக இருந்தால் பருவமழை பொய்த்து அல்லது வேறு காரணங்களினால் அந்தப் பகுதியில் உபரி நீர் கிடைக்கவில்லையானால் திட்டம் பயனற்றதாகிவிடும். பொன்னை ஆற்றின் மேல் பகுதியில் சில நீர்த்தேக்கங்கள் அமைக்கப்படுவதால் அதனால் நீர் வரத்து குறைந்துவிடுமா என்பதை எல்லாம் பரிசீலனை செய்து, இந்தத் திட்டத்தை எடுத்துக்கொள்ள இருக்கிறோம்.